மதுரை 16,
25.08.2022

அனுப்புநர்

S. பசும்பொன் பாண்டியன்,
வழக்கறிஞர்,
65/1 A, அன்னை இல்லம்,
பல்லவன் நகர் 3வது தெரு,
பிபி சாவடி,
மதுரை – 625 016.

பெறுநர்

அரசு தலைமை செயலர் மற்றும் விழிப்புணர்வு ஆணையாளர்,
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை 600 009.

அய்யா,

பொருள்: புகார் மனு – ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. மற்றும் மேற்பார்வை பொறியாளர் திரு. குமரேசன் ஆகியோர் மீது விசாரணை நடவடிக்கை எடுக்க கோரி மனு – தொடர்பாக.

********

1. நான் வழக்கறிஞர் ஆக பணியாற்றி வருகிறன். நான் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களில் சட்ட நடைமுறைகளை செய்து வருகிறேன். நான் பல்வேறு சமூக ஊடகங்களின் வாயிலாக பொது வாழ்க்கையில் நடைபெறும் ஊழல்களை ஊடகங்களில் எனது நேர்காணல்கள் மூலம் வெளிப்படுத்தி வருகிறேன். நான் பொது மக்களிடமிருந்து அரசு ஊழியர்கள், குறிப்பாக தமிழ்நாடு அரசின் மேல் மட்டத்தில் உள்ள அரசு அதிகாரிகளின் ஊழல்களை பற்றிய தகவல்களை நாள்தோறும் பெற்று வருகிறேன்.

2) எனக்கு சமீபத்தில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் ஒப்பந்தக்காரர்களுக்கான சந்திப்பு நிகழ்ச்சி பற்றிய தகவல் அறிய நேர்ந்தது. கடந்த 21.09.2021 அன்று தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்காக அதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களால் எழும்பூரில் உள்ள காவல் அதிகாரிகள் கூடத்தில் (Police Officers Mess) நடைபெற்றது. அன்றைய தின கூட்டத்தில் திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அவர்கள் அங்கு குழுமியிருந்த ஒப்பந்தக்காரர்களிடம் தமிழ்நாடு வீட்டு வசதி கழகத்தின் மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரன் என்பவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளதாகவும் அதற்கு அவரிடம் ஆதாரம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், திரு. குமேரஸ்வரன் எந்த ஒரு மதிப்பீடு, ஒப்பந்த புள்ளி மற்றும் ஒப்பந்தங்களை கையூட்டு பெறாமல் கையொப்பம் இடுவதில்லை எனவும் கூறியுள்ளார். மேலும் அவர் திரு. குமரேஸ்வரன் தனது மேற்பார்வை பொறியாளர் பதவியினை பயன்படுத்தி சென்னையிலும் மற்றும் பல்வேறு இடங்களில் வீடுகளையும் வாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் திரு ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அந்த கூட்டத்தில் பங்கேற்றவர்களிடம் உள்ள மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரனின் மீதான ஊழல் பற்றிய தகவல்களை தன்னிடம் தருமாறும் அதன் மூலம் திரு. குமரேஸ்வரன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்டும் எனவும் கூறியுள்ளார்.

3) மேலும் அவர் அக்கூட்டத்தில் பங்கேற்ற ஒப்பந்தக்காரர்கள் மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரனின் மீது அளித்த பல்வேறு ஊழல் சம்பந்தப்பட்ட விவரங்களை தமிழ்நாடு வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அவர்கள் மேற்பார்வை பொறியாளர் திரு. குமரேஸ்வரனின் ஊழல்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து பணியிடை நீக்கம் செய்யப்பட்ட அவரின் நண்பரான சங்கர் (எ) சவுக்கு சங்கர் மூலமாக மேற்பார்வை பொறியாளர் திரு. குமரேஸ்வரக்கு மிரட்டல் விட

ஆரம்பித்துள்ளார். திறந்த புள்ளி கோராமல் அனைத்து ஒப்பந்தங்களையும் திரு. நாராயணன் என்ற ஒப்பந்தக்காரருக்கு வழங்க வேண்டும் என்பதற்காக தான் காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன்,இ.கா.ப. அவர்கள் இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது. திரு நாராயணன் என்பவர் நிலை–2 (Class 2) ற்கான ஒப்பந்தக்காரர் ஆவார். அவர் ரூபாய் 75 லட்சம் மதிப்பிலான ஒப்பந்தங்களில் மட்டுமே பங்கேற்க முடியும். ஆனால், திரு. ஏ.கே. விஸ்வநாதன் அவர்களின் தூரத்து உறவாக இருப்பதால் அவரால் அனைத்து நிலையிலான ஒப்பந்தங்களையும் எளிதாக பெற முடிகிறது. மேலும், திரு நாராயணன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் அலுவலர்களை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பெயரில் மிரட்டலை தொடர்ந்து செய்து வருகிறார்.

4) மேலும் திரு ஏ.கே. விஸ்வநாதனின் நண்பரான சங்கர் (எ) சவுக்கு சங்கரின் உதவி மற்றும் மேற்பார்வையில் திரு. குமரேஸ்வரன் ரூபாய் 1 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களையும் ரூபாய் 25 லட்சங்களாக பிரித்து விடுகிறார். கடந்த ஒரு வருடமாக அனைத்து மதிப்பிலான ஒப்பந்தங்களையும் இவ்வாறு பிரிக்கப்பட்டு அனைத்து ஒப்பந்தங்களையும் திரு நாராயணனே பெற வேண்டுமென்றதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ரூபாய் 25 லட்சத்திற்கு அதிகமான ஒப்பந்தங்களை திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் கோருவதை தடுப்பதற்காகவும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முறையில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ரூபாய் 10 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களும் பிரிக்கப்பட்டு அனைத்து ஒப்பந்தங்களும் திரு நாராயணனுக்கே அளிக்கப்பட்டு வருகிறது.

5) மேற்கூறப்பட்ட ஒப்பந்தக்காரரான திரு நாராயணன் தமிழ்நாடு வீட்டு வசதி கழகத்தில் எந்த ஒரு பணியையும் கடந்த சில வருடங்களாக செய்யவில்லை. திரு ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அவர்கள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்

கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பதவி ஏற்றாரோ, அன்று முதல் தான் மேற்குறிப்பிடப்பட்ட திரு நாராயணன் பல்வேறு பணிகளை பெற ஆரம்பித்தது மட்டுமல்லாமல், எதிர்ப்பு தெரிவிக்கும் மற்ற ஒப்பந்தக்காரர்களையும் மிரட்ட ஆரம்பித்தார். மேலும், மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரன் ஒப்பந்தங்களில் கலந்து கொள்ள பெரிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கு அனைத்து வகையான நெருக்கடியையும் அளித்து, அதன் மூலம் அனைத்து ஒப்பந்தங்களையும் திறந்த ஒப்பந்தப்புள்ளி கோராமல் ஒற்றை ஒப்புந்தப்புள்ளி மூலம் அளித்து வருகிறார். மற்ற ஒப்பந்தக்காரர்கள் திரு. நாராயணன் மற்றும் சங்கர் (எ) சவுக்கு சங்கர் மூலமாக மிரட்டப்பட்டு, அவர்கள் ஒப்பந்தப்புள்ளியின் செயல் திட்டத்தை கூட கேட்பதற்கு அஞ்சுகிறார்கள்.

6) மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரன் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த அனைத்து அதிகாரத்தையும் தானே ஏற்றுக் கொண்டு, மாநில அரசின் உயர் அதிகார்களை பற்றி பயப்படாமல், பல்வேறு ஊழல் முறைகளின் மூலம் அளவிற்கு அதிகாக சொத்து சேர்த்துள்ளார். தற்போது தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தின் தலைமை பொறியாளராக பொறுப்பில் இருப்பவர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அவர்களின் உத்தரவினால் இதைப் பற்றி கண்டுகொள்ளாமல் இருக்கிறார். மேற்கூறப்பட்ட தலைமை பொறியாளர் திரு. குமரேஸ்வரன் ஊழலுக்கு உறுதுணையாக இருக்கிறார். திறந்த புள்ளி ஒப்பந்தங்கள் கோராமல் அனைத்து பணிகளையும் ஒன்றை ஒப்பந்த முறையில் திரு நாராயணன் என்பவருக்கு அளிப்பது ஒப்பந்த வெளிப்படைத் தன்மை (Tender Transparency Act) சட்டத்தை மீறும் செயலாகும். இவ்வாறு ஒரு நபருக்கே அனைது ஒப்பந்தங்களை அளிப்பதன் மூலம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கும் மற்றும் மாநில கருவூலத்திற்கும் மிகப்பெரிய பண இழப்பை ஏற்படுத்திவிடுகிறது. மேலும், கட்டப்படும் கட்டிடங்களும் உறுதியற்ற நிலையில் தான் கட்டப்படுகிறது.

7) மேற்கூறப்பட்ட வழிகளில் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ரூபாய் 30 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள், ஒப்பந்த செயல்முறை வழிகாட்டுதல்களை மீறி திரு. குமரேஸ்வரனால் பிரிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, திறந்த ஒப்பந்த முறையில், ஒப்பந்த புள்ளி கோருபவர்கள் திட்ட மதிப்பீட்டை விட 10 சதவீதம் குறைவாக தான் குறிப்பிடுவார்கள். ஆனால், ஒற்றை ஒப்பந்த புள்ளி முறையில் அனைத்து ஒப்பந்தங்களையும் திரு நாராயணனுக்கே அளித்த வகையில், தற்கோதைய காவலர் வீட்டு வசதி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு, ஏ.கே. விஸ்வநாதன் அவர்களின் ஆசி மற்றும் அனுசரனையோடு மேற்பார்வை பொறியாளரான திரு குமரேஸ்வரனும் மற்றும் சவுக்கு சங்கரும் ரூபாய் 3 கோடிக்கும் அதிகமாக பணம் சம்பாதித்துள்ளனர்.

8) மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரன் 31.08.2022 அன்று பணி ஓய்வு பெற உள்ளார். தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற உதவி செயற் பொறியாளர் திரு. குமரேஸ்வரன் மீது 05.05.2022 அன்று பல்வேறு குற்றங்களை குறிப்பிட்டும் மற்றும் தற்போது நிலுவையில் இருக்கும் W.P. (MD) No. 9037/2016 குறிப்பிட்டு புகார் மனு அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட புகார் மனுவின் நகலை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப, அவர்களுக்கும் அனுப்பியுள்ளார். அவ்வாறு புகார் மனு பெற்ற பிறகும், திரு. ஏ.கே. விஸ்வநாதன் அவர்கள் கடந்த 12.08.2022 அன்று திரு. குமரேஸ்வரனின் பணி ஓய்வு முன்மொழிவை தமிழ்நாடு உள்துறைக்கு அனுப்பி, அதன் மூலம் திரு. குமரேஸ்வரனின் பணி ஓய்விற்கு ஆணை கேட்டுள்ளார். தமிழ்நாடு அரசின் உள்துறை 05.05.2022 நாளிட்ட புகார் மனுவின் நடவடிக்கை குறித்த அறிக்கையை தலைவரும் நிர்வாக இயக்குநருமாக திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப. அவர்களிடம் கேட்டுள்ளதாக நான் அறிகிறேன்.

9) மேலும், மேற்பார்வை பொறியாளர் திரு, குமரேஸ்வரனின் அனைது சட்டவிரோதன செயல்களுக்கும் திரு, ஏ.கே. விஸ்வநாதன், அவருடைய உறவினர் திரு. நாராயணன் மற்றும் அவருடைய நண்பர் சங்கர் (எ) சவுக்கு சங்கர் ஆகியோர்களுக்கு நேரடி தொடர்பு இருப்பதை அறிய முடிகிறது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் மேற்பார்வை பொறியாளர் திரு. குமரேஸ்வரனின் அனைது சட்ட விரோத செயல்களையும் மூடி மறைத்து, திரு குமரேஸ்வரனின் சட்ட விரோத செயல்கள் மீது விசாரணை தொடங்குவதற்கு முன்னால் அவரின் பணி ஓய்வு நிகழ்வுக்காக அனைத்து செயல்களையும் செய்து வருகிறார். ஆகவே, சட்ட விரோத மற்றும் ஊழல் செயல்களில் ஈடுபட்ட மேற்பார்வை பொறியாளர் திரு. குமரேஸ்வரனின் செயல்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது. மேலும், அனைத்து ஒப்பந்தங்களையும் திரு நாராயணனுக்கே அளித்த புகாரின் பேரிலும் உடனடி நடவடிக்கை வேண்டப்படுகிறது. நான் மேற்பார்வை பொறியாளரான திரு. குமரேஸ்வரன் அவர்களால் அளிக்கப்பட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்களை Pendrive–இல் இத்துடன் இணைத்துள்ளேன்,

எனவே, பொது நலன் கருதி, எனது புகார் மனு மீது உடனடி விசாரணை நடத்த ஏதுவாக ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

(S. பசும்பொன் பாண்டியன்)